பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 21 (4—7—68) வியாழன் ★ வெளியூர்: ஆனி 22 (5—7—68) வெள்ளி [இதழ்: 17

குழுக்கள் கலைக்கப்படுகின்றன!

புதுடில்லி, ஜூலை 4—

மத்திய தகவல்—ஒலிபரப்பு அமைச்சுத் துறை, தான் அமைத்த 42 குழுக்களில் 15 குழுக்களைக் கலைத்துவிடுவதெனத் தீர்மானித்துள்ளதாம்.

மற்றும் 12 குழுக்களின் அமைப்பையும், பணிகளையும் மாற்றுவதென்றும் அமைச்சுத் துறை முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

தென்காசியில் தி. மு. க. வெற்றி

காங்கிரசு வேட்பாளரைத் தோற்கடித்தார் கதிரவன்

நீதி நிலைத்தது - நேர்மை நிமிர்ந்தது - உண்மை வென்றது

சூதும் வாதும் தோற்றோடின — தேர்தல் களத்தைப் போர்க் களமாக்க முயன்றோர் படுதோல்வி கண்டனர்

தமிழகக் காங்கிரசாரின் தரங்கெட்ட செயலுக்குச் சரியான பாடம்

தென்காசி, ஜூலை 4—

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

கழக வேட்பாளரான கா. மு. கதிரவன் பல்லாயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்றுக் காங்கிரசு வேட்பாளரைத் தோற்கடித்திருக்கிறார்.

சென்ற பொதுத்தேர்தலில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்ற இந்த இடத்தை இப்போது கழகம் கைப்பற்றியிருக்கிறது.

முன்பு சில நூறு வாக்குகளே கூடுதலாகப் பெற்று காங்கிரசு வென்ற இத்தொகுதியில் இப்போது பல்லாயிரம் வாக்குகள் கழகத்திற்கு அதிகமாகக் கிடைத்திருப்பது கழக ஆட்சிக்கு மக்களின் ஆதரவு எந்த அளவுக்கு வளர்ந்தோங்கிவருகிறது என்பதற்கோர் சான்றாகும்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு குலைந்துவிட்டதாகக் கூப்பாடு போட்ட காங்கிரசுக்காரர்களின் — குறிப்பாக துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயின் முகத்தில் கரியை வழித்துத் தடவியிருக்கின்றனர் தென்காசி வாக்காளப் பெருமக்கள்!

"நீங்கள்தான் வெட்கம் கெட்டுப்போய் — பொதுத்தேர்தலில் பட்ட அடியையும் துடைத்துக் கொண்டு — இங்கு வந்து வாயில் வந்தவாறெல்லாம் கத்தினீர்களேயொழிய, சட்டமும் கெடவில்லை — அமைதியும் கெடவில்லை" என்று திருப்பிச் சொல்லாமல் சொல்லிவிட்டனர்—தென்காசித் தொகுதி மக்கள்!

கழக ஆட்சியின் பதினைந்து மாதச் சாதனைப் பட்டியல் கேட்டவர்களுக்கு, தேர்தல் முடிவே பதில் தந்திருக்கிறது!

'ஆசை வெட்கமறியாது' என்பதால், 'எப்படியேனும் தென்காசியைக் கோட்டைவிடாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்' என ஆசைப்பட்டு 'தேர்தல் வித்தகர்' என்று புகழ்பெற்ற காமராசர் உட்பட — தமிழ்நாடு காங்கிரசு மூலவரிலிருந்து காங்கிரசுத் தொண்டரடிப் பொடிஆழ்வார்கள் வரையில் — தேர்தல் களத்துக்கு வந்திருந்து தங்களுக்குத் தெரிந்த தேர்தல் வித்தைகளையெல்லாம் செய்து பார்த்தும்—ஆடாத 'ஆட்ட'மெல்லாம் ஆடியும்—பேசாத பேச்செல்லாம் பேசியும்—தங்கள் மனக்கோட்டை தவிடு பொடியாவது உறுதி என்று முன்கூட்டியே தெரிந்து கொண்டு கழகத்தின் மீதும், கழக ஆட்சியின் மீதும் வீண்பழி சுமத்தியும், இல்லாத குற்றங்களையெல்லாம் சாட்டியும் பேசத் தலைப்பட்டுவிட்டனர்.

தென்காசித் தொகுதியில் கழகத்தவர் அராஜகத்தில் இறங்கிவிட்டதாகக் கற்பனைக் குற்றச்சாட்டுடன் போலீசு ஐ. ஜி. யிடம் முறையிட, பக்தவத்சலத்தைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்! தென்காசியிலிருந்து சுப்பிரமணியத்தின் தந்தி பறந்தது!

கழகத்தவர் பணம் கொடுத்தும் வாக்காளர்களை மிரட்டியும் வாக்குச் சேகரித்ததாக இப்போது தமிழ்நாடு காங்கிரசு மூலவர் மேடை போட்டு அலற ஆரம்பித்திருக்கிறார்!

தென்காசியில் தங்களுக்குத் தோல்வி உறுதி என்பதை காங்கிரசார் உணர்ந்து கொண்டதன் விளைவுதான், இந்த 'நாடக'த்தை அவர்கள் நடிக்கத் தொடங்கியது!

இந்த இடைத் தேர்தல் முடிவு நாடே எதிர்பார்த்த ஒன்றாகும்! சாதாரண ஓர் இடைத் தேர்தலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏற்படக் காரணமாக இருந்தவர்களே தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்கள்தாம்!

வடக்கே பல மாநிலங்களில், காங்கிரசல்லாத ஆட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கவிழ்த்து வரும் காங்கிரசாருக்கு, தமிழ்நாட்டில் ஓர் இடைத் தேர்தலிலாவது ஆளுங்கட்சியைத் தோற்கடித்துக் காட்டலாமே என்ற நைப்பாசை ஏற்பட்டது!

மற்ற மாநிலங்களிலெல்லாம், ஆட்சிகள் கவிழ்ந்தது, 'ஏதோ மக்களின் மனமாற்றத்தால்தான்' என்பதாகக் கருதிக் கொண்டு, அதேபோல், 'பதினைந்து மாத காலத்தில் தமிழ்நாட்டிலும் மக்கள் மனமாற்றமடைந்திருப்பர்' என்று வடக்கத்திக் காங்கிரசார் தப்புக்கணக்குப் போட்டு மனப்பால் குடித்துக் கொண்டிருந்தனர்! அவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்தனர் தென்காசி வாக்காளர்கள்!

அரசியல் தில்லுமுல்லுப் பிரசாரத்துக்கிடையே சாதி உணர்வையும், மத உணர்வையும் கூடக் கிளப்பிவிட்டுப் பார்த்தனர்! பணத்தையும் தண்ணீர்போல் பாயவிட்டுப் படாதபாடுபட்டுப் பார்த்தனர்! எதுவும் பலனளிக்கவில்லை. பரிதாபகரமாகத் தோல்வியை அணைத்துக் கொண்டனர்!

அடிபட்ட குக்கல் குரைப்பது போல்இப்போது, தங்கள்தோல்வியை மறைத்துக்கொள்ள மேடை போட்டுப் பேச ஆரம்பித்து விட்டார்கள் அவர்கள்!

இல்லாததையும் பொல்லாததை சொல்லி, மக்கள் கவனத்தைத் திசை திருப்ப முனைந்திருக்கிறார்கள்!

இன்னும் சிறிது காலத்துக்கு இந்தத் திருப்பணியையே தொடர்ந்து நடத்திவருவார்கள் என்பது எல்லோரும் எதிர்பார்த்ததுதான்!

கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்தானே — பொறுத்துக் கொள்ளலாம்!

'இனித் தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி தலையெடுக்க முடியாது' என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது இந்த இடைத்தேர்தல்!

'கழக ஆட்சியைக் காங்கிரசார் தவிர வேறு எவரும் வெறுக்கவில்லை' என்பதையும், 'இந்த ஆட்சியை அசைக்கக் காங்கிரசார் கனவிலும் கருத முடியாது' என்பதையும் இத்தேர்தல் உறுதிப்படுத்திவிட்டது!

கதிரவனின் ஒளியைக் கையால் மறைக்க முனைந்த காங்கிரசாரின் பரிதாப நிலையை எண்ணிப் பொதுமக்கள் அனுதாபப் படுகிறார்கள்!

பொதுத் தேர்தலில் உதயசூரியனின் ஒளிபடத் தவறிய தென்காசித் தொகுதியில் இப்போது கதிரவனின் பேரொளியாகப் படரத் தொடங்கிவிட்டது!

இந்த இடைத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்காக ஆதரவளித்தும், அறிக்கைகள் விடுத்தும், அரும்பாடுபட்டும் உதவிய தோழமைக் கட்சிகளின தலைவர்கள்—தொண்டர்கள் அனைவரும் கழகத்தின் நன்றிக்கு உரியவர்களாவர்!

கழக வேட்பாளருக்காகக் கண்துஞ்சாது — பசிநோக்காது - மெய்வருத்தம் பாராது இரவு பகலாகப் பணியாற்றிய உள்ளூர், வெளியூர் கழகத் தொண்டர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள்.

கழகத்தின்பால் நீங்காப் பற்றும், நீண்ட நாள் தொடர்பும் பொதுப் பணியாற்றுவதில் மட்டற்ற ஆர்வமும் படைத்த இளைஞரான தோழர் கதிரவன் தொகுதி மக்கள் தமக்கு இட்ட கட்டளையாக இந்த வெற்றியினை ஏற்று, கடமையாற்றத் தவறமாட்டார் என்பதில் ஐயமில்லை!

நாசருக்கு எதிராகச் சதி

அதிகாரிகள் கைது

இலண்டன், ஜூலை 4—

எகிப்து நாட்டு அதிபர் நாசரையும் அவரது ஆட்சியையும் இரண்டாவது முறையாக அகற்றுவதற்காகக் கடந்த ஜூன் திங்களில் நடைபெறவிருந்த சதி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம்.

இந்தச் சதியின் காரணமாக இராணுவ அதிகாரிகள், சிவிலியன் அதிகாரிகள், போலீசு அதிகாரிகள் ஆகிய 35 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அரசுக் கொள்கையின்மீது வாக்கெடுப்பு நடந்த மே 2-ம் நாளன்று முதல் சதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாம்; அதுபோது எட்டு அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் திங்களில் நடைபெறவிருந்த சதியில் எகிப்து அதிபர் நாசரை அலெக்சாண்டிரியாவில் உள்ள அவருடைய தங்குமிடத்திலிருந்து கடத்திக் கொண்டுபோய் விசாரணை நடத்திக் கொலலுவதற்குத் திட்டமிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஏழுமலையானுக்குக் கிடைத்த பிரிவுத் தொகை

திருப்பதி, ஜூலை 4—

திருப்பதி தேவஸ்தான கூட்டுறவு ஸ்டோரிலிருந்து திருப்பதி ஏழுமலையானுக்கு ரூ. 50,000 பிரிவுத் தொகை கிடைத்திருக்கிறது.

1966—67-ம் ஆண்டில் ரூ. 75 இலட்சத்திற்கு இந்தக் கோயிலிலிருந்து வாங்கப்பட்ட பொருள்களுக்காக இந்தப் பிரிவுத் தொகை கிடைத்திருக்கிறது.

அகமதாபாத் ஆலை மூடப்பட்டதன் எதிரொலி

அகமதாபாத் நகரில் மேலும் ஒரு பஞ்சாலை மூடப்பட்டிருக்கிறது.

பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து இந்நகரில் இத்துடன் நான்கு பஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த ஆலை மூடப்பட்டிருப்பதால் ஏறத்தாழ 2,800 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பஞ்சு பற்றாக்குறை காரணமாக இப்பஞ்சாலை மூடப்பட்டிருப்பதாக இந்த நிறுவனத்தார் அறிவித்திருக்கின்றனர்.

தோல்வியை ஒப்புக்கொள்கிறார் டெல்லி அமைச்சர்

வேறு எந்த நாட்டிலும் இல்லாத வறுமை இங்கே!

நாணய மதிப்புக் குறைப்பின் நோக்கம் நிறைவேறவில்லை

தஞ்சை, ஜூலை 3—

"உலக அரங்கில் செஞ்சீனா நம்மை இகழ்ந்து பேசிய காலம் ஒன்று இருந்தது; இன்று நாம் அப்படியில்லை!

"பனி என்றால் என்ன என்று தெரியாத தமிழ்நாட்டுப் போர் வீரர்கள், இமாலயத்தின் 18,000 அடி உயரத்தில் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

"நம் நாட்டில் உள்ள தரித்திரம், வேறு எந்த நாட்டிலும் இல்லை!

"நாட்டிலிருந்து வறுமையை ஓட்டவேண்டும்; வறுமையை வைத்துக்கொண்டு நாம் முன்னேற இயலாது!

"வறுமையை போக்க சமுதாய—பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டும்.

"பண மதிப்பைக் குறைத்தது சரியானதுதானா என்பது பற்றி ஆட்சியிலிருக்கும் நான் கருத்து வெளியிடுவது சரியன்று; 'நடைபெற்றது சரியா தவறா?' என்று பேசிக்கொண்டிருப்பதில் எவ்விதப் பயனுமில்லை; பண மதிப்பு மாறியதற்குப் பின்பு, எங்களுக்குத் தொல்லைகள் அதிகம்! நாங்கள் நினைத்தது நடைபெறவில்லை!"

—டாக்டர் வி.கே.ஆர்.வி. ராவ்
(மத்திய போக்குவரத்து அமைச்சர்)

இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு

மத்திய அமைச்சர் தரும் தகவல்கள்

திருச்சி, ஜூலை 3—

அடுத்த 15-ஆண்டுகளில் இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்திய மரபினரைக் குடியமர்த்துவதற்கான முன்னேற்டப் பணிகள் தமிழகத்தில் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

திருச்சி மாவட்டம் திருவரங்குளம் பிளாக்கில், இந்த அகதிகளுக்காக விவசாயக் காலனி ஏற்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 2,000 ஏக்கா நிலத்தை மத்திய அரசின் அகதிகள் நலத் துணையமைச்சர் டி. ஆர். சவாண் பார்வையிட்டார்.

"இந்த இடம் விவசாயக்காலனி ஏற்படுத்துவதற்கு மிகவும் ஏற்ற இடமாகும்; இந்த இடத்தில் நிறைய ஊற்று நீர் வளமும் இருக்கிறது; இங்கு என்ன பயிர் செய்யலாம் என்பதுபற்றி விரைவில் முடிவு செய்யப்படும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

"இலங்கை அரசுடன் இந்தியா செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி அடுத்த 15-ஆண்டுகளில் 5.25 இலட்சம் இந்திய மரபினர் திருப்பியனுப்பப்படுவர்; முதல் குழுவினர் அக்டோபர் மத்தியில் வருவர்" என்றார் அவர்.

"அகதிகளின் மறுவாழ்வுக்கும், நல்வாழ்வுக்கும் மத்திய அரசு முழு அளவில நிதியுதவி அளிக்கும்; இந்தத் திட்டங்களைத் தமிழக அரசு அமுல் நடத்திவைக்கும்" என்றும் அவர் கூறினார்.

"மண்டபத்திலுள்ள இடைவழி முகாமில் சுமார் 1,000 குடும்பங்களுக்கு இடமிருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அதிகம்பேருக்கு வேலை வாய்ப்புக்கள் தரக்கூடிய சில தொழிற்சாலைகளும் இலங்கை அகதிகளுககாக ஏற்படுத்தப்படும்" என்றார் அமைச்சர்.

சீனாவுக்குத் தப்பிச் சென்ற நாகர் தலைவர்

வடக்கு வியட்நாமுக்கும் செல்ல ஏற்பாடு

இம்பால், ஜூலை 2—

தற்போது சீனாவில் தங்கியிருக்கும் தலைமறைவு நாகர்களில் ஒரு குழுவினர், நவம்பர் திங்களில் அங்கிருந்து திரும்பிவரத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

தலைமறைவு நாகர்களின் முக்கிய அரசியல் தலைவரும், நாகர்கள் கவுன்சிலின் செயலாளருமான முய்வாவும் இந்தக் குழுவில் வருவார் என்று தெரிகிறது.

திரு. முய்வா, கடந்த ஆண்டு சனவரியில் சீனாவுக்குச் சென்றார்; அவர் வடக்கு வியட்நாமுக்குச் சென்று, 'வியட்காங்' எப்படி இயங்குகிறது என்பதைக் கண்டறிந்து வருவார் என்றும் கூறப்படுகிறது.

தலைமறைவு நாகர்கள் தென்சீனாவில் டெங் சங்கிலும், லன்விலிங்கிலும் உள்ள தனி முகாம்களில் கொரில்லாப் போர்ப் பயிற்சி பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த முகாம்கள், நாகர் பகுதியின் வடக்கு எல்லையிலிருந்து 300 மைல் தொலைவில் உள்ளன; இந்த வடக்கு எல்லை வழியாகத்தான் நாகர்கள் தப்பிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

மூன்று நாகர் குழுக்கள் சீனாவுக்குப் புறப்பாடு

எல்லையைக் கடந்து தப்பிவிட்டதாகத் தகவல்

இம்பால், ஜூலை 3—

150-க்கு மேற்பட்ட மிஜோ, குக்கு கலகக்காரர்களின் இரண்டாவது குழு சீனாவுக்குச் செல்வதற்காக சென்ற வாரக் கடைசியில் எல்லையைக் கடந்து பர்மாவுக்குச் சென்றது; சீனாவில் கொரில்லாப்போர் பயிற்சி பெறுவதற்காக இவர்கள் போகிறார்களாம்.

200 பேருக்கு மேற்பட்ட முதல் குழு கடந்த 25-ந் தேதியன்று எல்லையைக் கடந்தது; இவர்கள் ஒரு பர்மியப் போலீசு சாவடியில இருந்த பங்கீட்டுப் பொருள்களைச் சூறையாடினராம்.

இரண்டாவது குழுவினர் இடைமறிக்கப்பட்டபோது, அவர்கள், பாதுகாப்புப் படையினர் போரிட்டு எல்லையைத் தாண்டி தப்பிவிட்டனராம்.

இதைத் தவிர மேலும் 200 பேர் கொண்ட மூன்றாவது குழு ஒன்றும் வட பர்மாவிலிருந்து சீனாவுக்குப் போய்கொண்டிருப்பதாக ஒரு தகவல் கூறுகிறது.

ஒரிசா அரசில் நிர்வாக ஊழல்!

தணிக்கை அறிக்கை தகவல்

புவனேசுவரம், ஜூலை 3—

ஒரிசா மாநில அரசின் 1968-ம் ஆண்டைய கணக்குத் தணிக்கை அறிக்கை, சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டது; அதில் பல ஒழுங்கீனங்கள் நிகழ்ந்திருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

விசயவாடாவில் உள்ள நிறுவனம் ஒன்றிடமிருந்து 12-யூகோ டிராக்டர்களும், புல்டோசா இணைப்புக்களும் வாங்குவதற்காக, அந்த நிறுவனத்துக்கு ரூ 25-இலட்சம் முன்பணமாக அரசு கொடுத்தது; ஆனால் அந்த நிறுவனம் ஒரு டிராகடரைக்கூட கொடுக்கவில்லை. இதுபற்றி சென்ற ஆகஸ்டுத் திங்களில் அரசுக்குத் தெரிவிககப்பட்டது அதுபற்றி அரசின் கருத்து என்ன என்பது இன்றும் தெரிவிக்கப்படாமலே இருந்துவருகிறது.

மாணவர்—அரசு ஊழியர்—தாழ்த்தப்பட்டோர் நலன்கள்

தமிழகத்தில் கழக ஆட்சி புரிந்துள்ள சாதனை

தமிழக அரசுப் பொறுப்பை தி.மு.க. ஏற்றபின் கடந்த 15 மாத காலத்தில் அரசின் ஒவ்வொரு துறையிலும் புரிந்துள்ள சாதனைகளின் பட்டியல்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன (ஏற்கனவே சில துறைகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன); தாழ்த்தப்பட்டோர் நலன், மாணவர் நலன், அரசு ஊழியர் நலன் ஆகியவை தொடர்பான சாதனைகள் வருமாறு:—

மாணவர் நலன்

1. 1967-ல் நடந்த மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் மாணவர்களுக்கு இடையூறு இல்லாமலும், அதிகச் சேதாரமில்லாமலும் சமாளிக்கப்பட்டது.
2. மாணவர்களின் விருப்பத்திற்கேற்பத் தமிழக அரசு, தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டம் கொண்டுவந்தது; இந்தி கற்றுத் தருவதை நிறுத்தியது.
3. இந்திச் சொற்கள் உள்ள என்.சி.சி. பயிற்சியை நிறுத்தியது.
4. கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக்கப் படுகிறது.
5. சனவரி 25-ம் நாளை இந்தி எதிர்ப்புத் தியாகிகட்கு வீர வணக்கம் செலுத்தும் நாளாக அறிவித்தது; அந்நாளில் கல்வி நிலையங்களுக்கு விடுமுறையளிகக அரசு சம்மதித்தது.
6. புதிதாகப் படித்துவரும் பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கப் பொறியாளர்களின் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55-ஆகக் குறைத்தது.
7. மாணவர்கள் கல்விச் சலுகை பெறப் பிற்பட்ட, சாழ்த்தப்பட்ட பெற்றோர் வருமானம் ரூ. 1 500-லிருந்து ரூ. 2,000-ஆக உயர்த்தப்பட்டது.
8. ஆண்டுக்கு ரூ. 1,500-வரை வருமானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு பி.யூ.சி, பி.டி.சி. வகுப்புக்களில் இலவசக் கல்வி அளித்தது.
9. என். ஜி. ஜி. ஓ-வினர் பிள்ளைகளுக்கும் பி.யூ.சி, பி.டி.சி-இல் இலவசக் கல்வி அளித்தது.
10. தொழிற்பயிற்சிக் கல்லூரிகளில் பழைய மாணவர்கள் புதிய மாணவர்களைக் கேலி செய்யும் 'ராக்கிங்' முறை கடந்த ஆண்டிலிருந்து நீககப்பட்டது.
11. காரமடையில் பஸ் மோதி மாண்ட மாணவர்களுக்குச் சட்டமன்றம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது.
12. சென்னை மாணவர் — பஸ் தொழிலாளர் மோதலை நீதி விசாரணை செய்ய ஆணை பிறப்பித்தது.
13. பி. டி. படிக்கும் மாணவர்களுக்கு மாத உதவிப் பணம ரூ. 25-லிருந்து ரூ 50 ஆக உயர்த்தப்பட்டது.
14. கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பணம் கட்டாமலே கல்லூரிகளில் சேருவதற்கு 'உரிமை அட்டை' வழங்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் நலன்

1. கழக ஆட்சியில் தமிழக அரசு கலப்பு மணம் செய்துகொள்வோருக்குத் 'தங்கப் பதக்கம்' பரிசு கொடுக்க முன்வந்திருக்கிறது. இதனால் தமிழகத்தில் சாதி வேறுபாடில்லாத சமுதாயம் எதிர்காலத்தில் மலரவிருக்கிறது.
2. தாழ்த்தப்பட்ட மாணவர்கள், முன்பு கல்லூரிகளில் சேரும்போது சிறப்புக் கட்டணமும், உணவு விடுதி முன்பணமும், அரசினர் உதவிப் பணம வரும்வரை மாதா மாதம் உணவு விடுதிககுப் பணமும் கட்டவேண்டும்; தற்பொழுது 'உரிமை அட்டை' வழங்கப்படுகிறது. இதைக கல்லூரியில் கொடுததுப் பணம் ஏதுமில்லாமல் சேரலாம். பண வசதி இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள், இதனால் தங்கள் பிள்ளைகளுக்கு உயர் கல்வி அளிக்க வசதி பிறக்கிறது.
3. தாழ்த்தப்பட்டோருக்குத் தொழில் துவங்க உதவிப் பணம் அளிக்கிறது.
4. அரசினர் விடுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுககு ஒரு செட் சீருடை கொடுக்கிறது.
5. இந்த ஆண்டிலிருந்து, தாழ்த்தப்பட்டோர் உணவு விடுதி மாணவர்களுக்குக் கூடுதல் விடுதிச் செலவு கொடுக்கப்படுகிறது.
6. ஏழை விவசாயிகளுக்கு நிலம் 'பட்டா' செய்து கொடுப்பதில் தாழ்த்தப்பட்டோருக்கு முதல் சலுகை கொடுககிறது. இதுவரை 20,000-ஏக்கா நிலம் 'பட்டா' செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 50,000-ஏக்கர் நிலம் 'பட்டா' செய்து கொடுக்கப்பட உள்ளது.
7. வீடு கட்டிக்கொள்வதற்கு வீட்டு மனை இலவசமாகவும், வீடு கட்டப் பணமும் கொடுக்கிறது.

அரசு அலுவலர்கள் நலன்

1. கழக ஆட்சியில் தமிழக அரசு, ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கும் மருத்துவ உதவி அளிக்கிறது.
2. மே நாளையும், திருவள்ளுவர் நாளையும், முகமது நபி நாளையும் விடுமுறை நாட்களாக அறிவித்துள்ளது.
3. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள், அமைச்சருடன், கட்சி சுற்றுப்பயணத்தின் போது செல்லவேண்டி இருநதது; கழக ஆட்சியில் செல்லவேண்டியது இல்லை.
4. காங்கிரசு ஆட்சி, 'திங்கள், வியாழன் முதலிய கிழமைகளில் மாலை 3 மணிக்குமேல் ஓட்டல்களைத் திறக்கக்கூடாது' என ஆணை பிறப்பித்தது; இதனால், ஓட்டல்களில் உணவு உண்ணும் ஏராளமான மக்கள் இன்னலுக்குள்ளாயினர். கழக ஆட்சியில், ஓட்டல்கள் எல்லா நாட்களிலும்—எல்லா நேரங்களிலும் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
5. 'கால்நடை மருத்துவர்'களும், அரசிதழ் பதிவு பெற்றவர்களாகப் பதவி உயர்வு பெற்றனர்.
6. அரசிதழ் பதிவுபெறாத எல்லா அரசு ஊழியர்கள்—மாதம் ரூ. 400-க்குக் குறைவாகப் பெறும் உள்ளாட்சி ஊழியர்கள் ஆகியோரின் பிள்ளைகட்குப் புகுமுக வகுப்பு, புகுமுக பொறியியல் வகுப்புகளில் இலவசக் கல்வி அளிக்கப் படுகிறது.
7. முதன்முதலாக 'நகர ஈட்டுப் படி', 1—10—67 முதல் சென்னையில் உள்ள தமிழக அரசு ஊழியர்களுக்குக் கழக அரசு வழங்கியது.
8. மத்திய அரசு ஊழியர்களின் பஞ்சப் படிக்குச் சமமாக 1—11—67 முதல் கழக அரசு தமிழக அரசின் ஊழியர்களுக்குப் பஞ்சப் படி வழங்கியது.
9. செகண்டரி கிரேடு தகுதிபெற்று ஹையர் கிரேடு ஊதியம் பெறும் 5,000 ஆசிரியர்களுக்குத் தகுதிக்கேற்ற ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.
10. ஆசிரியர்களுக்கு 40 பீரியடு முறை வேலைப் பளுவாக இருந்தது; எனவே, அது, 35 பீரியடுகளாகக் குறைக்கப்பட்டது.
11. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது அரசு ஊழியர்களுக்கு விடுமுறை அளிககப்பட்டது.
12. உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கும் 'பென்சன்' திட்டம் அனுமதிக்கப்பட்டது.
13. முதல் வகுப்பு அரசு வழக்கறிஞர்கள், அரசிதழ் பதிவு பெற்றவர்களாகத் தகுதி உயர்வு பெற்றனர்.
14. அரசு ஊழியர்களின்—அவர்களின் பிள்ளைகளின் திருமணத்திற்குத் 'திருமணக் கடன்' கொடுக்கப்பட இருககிறது.
15. இந்த ஆண்டிலிருந்து மதுரை, மதுரையின் புறநகர்ப் பகுதிக்கும், சென்னையின் புறநகர்ப் பகுதிக்கும் 'நகர ஈட்டுப் படி' அளிப்பது விரிவு படுத்தப்பட்டுள்ளது.
16. இந்த ஆண்டிலிருந்து நகர ஈட்டுப் படி, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப் படுகிறது.
17. இந்த ஆண்டு 7,200 ஆசிரியர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.
18. இந்த ஆண்டு செகண்டரி கிரேடு தகுதி பெற்று ஹையர் கிரேடு ஊதியத்தில் பணிபுரியும் 3,000 ஆசிரியர்களுக்கு ஊதிய உயாவு அளிக்கப்படுகிறது.
19. உயர் கல்வித் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கு இரு சம்பள உயர்வு கழக அரசால் அளிககப் படவிருக்கிறது.
20. பதிவுத் துறையில் நீண்டகாலம் பணியாற்றி பதவி உயர்வு பெறாமல் இருக்கும் 324 எழுத்தர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.
21. கழக அரசில் 1955-க்குமுன்பே ஓய்வுபெற்றவர்களுக்கும் பென்ஷன் வழங்கப்படுகிறது.
22. கழக ஆட்சியில் இரண்டாவது முறையாகத் தமிழக அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசாங்க ஊழியர்களின பஞ்சப் படிக்குச் சமமாக 1—6—68-முதல் பஞ்சப் படி வழங்கப்பட்டது. பஞ்சப் படி உத்தரவு உடனே போடப்பட்டு இம்மாதச் சம்பளத்திலேயே புதிய பஞ்சப் படியையும் ஊழியர்கள் பெறுகிறார்கள்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தான் அதிகாரிகளின் பண மோசடி

ரூ. 2 கோடிவரை ஏப்பம்

ஜம்மு, ஜூலை 2—

காஷ்மீரிலிருந்து, பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பகுதிக்குக் குடியேறியதாகத் தவறான பதிவேடுகளைத் தயாரித்ததன் மூலம் பாகிஸ்தான் அதிகாரிகள் ரூ 2 கோடி வரை அரசாங்கப் பணத்தை மோசடி புரிந்துள்ளனர் என்பது போர் நிறுத்தக் கோட்டுக்கு அப்பாலிருந்துவந்த தகவல் கூறுகிறது.

கடந்த 1965-ஆம் ஆண்டு நடந்த இந்தியா—பாகிஸ்தான் போரின் போது, காஷ்மீரிகள் போர் நிறுத்த எல்லைக்கோட்டைக் கடந்து பாகிஸ்தான் ஆக்கிரமித்தப் பகுதிகளுக்குச் சென்று குடியமர்ந்தனர்; அவர்கள் குடியமர பாகிஸ்தான் அரசு ஏற்பாடுகளைச் செய்தது; அப்போது, அங்கு சென்று குடியேறியவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டும் வகையில் பொய்க் கணக்குகளைத் தயாரித்து, அகதிகளாக குடியமர்த்தும் செலவுக்கென ஏராளமாகப் பணம் பெற்றிருக்கின்றனர்.

மேலும், அப்போது அங்கு சென்று குடியேறியவர்களில் பெரும்பாலோர் ஓராண்டுக்குள் இந்தியப் பகுதிக்கே திரும்பி வந்து விட்டனர்; ஆனால், அவர்கள் தொடர்ந்து அங்கேயே இருப்பதாகக் கணக்குக் காட்டி, அவர்கள் பெயரால் பாகிஸ்தான் அரசிடமிருந்து அந்த அதிகாரிகள் நிறையப் பணம் பெற்றிருக்கின்றனர்.

அகதிகட்கு வழங்குவதற்கென, பல்வேறு முஸ்லிம் நாடுகளிலும் நன்கொடையாகப் பெறப்பட்ட கம்பளிகளையும், மற்றும் கம்பளி உடைகளையும், அகதிகளுக்கு வழங்குவதாகக் கூறி அரசிடமிருந்து பெற்றுத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவற்றில் பெரும் பகுதியை அகதிகட்கு வழங்குவதற்குப் பதிலாக, இராவல்பிண்டியிலும், கராச்சியிலும் விற்பனை செய்திருக்கின்றனர்.

கட்டுரை--கவிதைப் போட்டிகள்

"சென்னை 98-வது வட்டம் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழாவையொட்டி கவிதை—கட்டுரைத் திறனாய்வுப் போட்டிகள் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது; ஒவ்வொரு போட்டிக்கும் 3 பரிசுகள் வழங்கப்படும்"

என்று விழாக் குழுத் தலைவர் சி. பி. பவளவண்ணன் அறிவிக்கிறார்.

போட்டிகள் பற்றிய விவரம் வருமாறு :—

கவிதை :—'அண்ணாவின் தனித்தன்மை'—(60 வரிகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்)

கட்டுரை :—1. அரசியல் வித்தகர் அண்ணா; 2. வாழும் தலைவர்களில் அண்ணா; 3. உலக அறிஞர்களில் அண்ணா;—(ஏதேனும் ஒரு தலைப்பில் 10 பக்கங்களுக்கு மிகாமல் இருக்கவேண்டும்)

திறனாய்வு :— 'அண்ணா நூல்களில் திறனாய்வு'—(15 பக்கங்களுக்கு மிகாமல் இருக்கவேண்டும்)

கவிதை கட்டுரைகளை 15-8-68-க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் :—

புலவர் மணிமுடிச் சோழன்,
35, ஜோன்சு வீதி,
சைதாப்பேட்டை, சென்னை-15.

மறைவு

சென்னை 12-வது வட்ட தி.மு.க. உறுப்பினரும் சீரணித் தொண்டருமான எத்திராசன், 28—6—68-ல் இயற்கை யெய்தினார். அவருடைய குடும்பத்தினருக்கு வட்ட தி. மு. க. சார்பில் இரங்கலும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

அரச பரம்பரை படும்பாடு!

இந்தியாவில் முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு அளிக்கப்படும் 'அரச மானி'யத்தை நிறுத்த மத்திய அரசு உத்தேசித்து வருவது தெரிந்ததே.

ஏற்கனவே போதுமான வருமானம் இன்றி அல்லற்படும் தங்களுக்கு அரச மானியத்தை நிறுத்தலாகாது என்று முன்னாள் மன்னர்கள் போராடி வருகிறார்கள்.

இதே நிலை, மேற்கு ஜெர்மனியிலும் ஏற்பட்டிருக்கிறது. அங்கு உள்ள அரச பரம்பரையினர், பாரம்பரியச் சொத்தாக அவர்களுக்குக் கிடைத்துள்ள கோட்டைக் கொத்தளங்களை அவர்கள் கட்டிக் காக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், இன்றுள்ள நிலையில், அந்தப் பழங்காலத்துக் கோட்டைகளைப் பழுதுபார்க்க ஏராளமாகப் பணம் செலவழித்தாக வேண்டும். அந்த அளவுக்கு வசதியும் இவர்களுக்குக் கிடையாது.

கோட்டைகளை விற்றுத் தொலைக்கலாம் என்றால் அவற்றை வாங்குவதற்கும் ஆளில்லை! அப்படியே விலைபோனாலும், கிடைக்கின்ற தொகையைக் கொண்டு ஒரு சாதாரண வீடு வாங்கக்கூட முடியாத அளவுக்கு அது அற்பத் தொகையாகத்தான் இருக்கிறது!

அரச பரம்பரையைச் சேர்ந்த இந்தக் கோட்டைக் கோமான்கள், தங்கள் அல்லல்கள் களையப்பட வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள்!

நீக்ரோ தலைவரைக் கொன்ற ஜேம்ஸ் ரே

இலண்டனிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறான்

15-நாள் விடுதலைக் கோரிக்கை நிராகரிப்பு

டாக்டர் மார்டின் லூதர் கிங்கை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜேம்ஸ் எால் ரே, அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறான்.

இலண்டனிலுள்ள நீதிமன்றம் ஒன்று இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

15-நாள் விடுதலைக் கோரிக்கையை மாஜிஸ்திரேட் நிராகரித்தார்; 'தேவையானால் 'ஹேபியஸ் கார்பஸ்' மனு போட்டுக்கொள்ளட்டும்' என்றார்.

பிரிட்டிஷ் சட்டத்தின்படி, ஜேம்ஸ் எால் ரே, உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்துகொள்ளலாம்.

லூதர் கிங் கொலை சம்பந்தமான விசாரணையில், தமது சார்பில் வாதாடுவதற்கு ஒப்புக்கொண்ட அமெரிக்க வழக்கறிஞர் ஒருவரைச் சந்திக்கும் உரிமை தனக்கு மறுக்கப்பட்டுவிட்டதாக வழக்கின் துவக்கத்தில் ரே புகார் தெரிவித்தான்.

சிவசேனை நடவடிக்கைகளைப் பெரிதுபடுத்த வேண்டாமாம்

எல்லா மக்களின் நலனையும் அரசு பாதுகாக்குமாம்

மகாராட்டிர முதலமைச்சரின் கண்துடைப்புப் பேச்சு

பம்பாய், ஜூலை 3—

"தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும், மாராட்டிரத்தில் வாழும் அனைத்து மக்களின் நல உரிமைகளையும் பாதுகாக்கவும் என்னுடைய அரசு இயன்றதையெல்லாம் செய்யும்"

என்று மாராட்டிர முதலமைச்சர் விழா ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"பிரிவினைப் போக்குகளை ஒடுக்குவதற்கு இயன்றதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்; எனவே, 'சிவசேனை' போன்றவைகளின நடவடிக்கைகளுக்குப் பத்திரிகைகள் பெரும் அளவில் விளம்பரம் அளிக்காமலிருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மத்திய அரசில் இலஞ்சப் பெருச்சாளிகள்!

மத்திய புலன் விசாரணைப் பிரிவு இந்த ஆண்டு மே மாதத்தில் பகிரங்க விசாரணைக்காக எடுத்துக் கொண்ட 175 வழக்குகளில் 35 கெசட் பதிவு அதிகாரிக்கும் வேறு 183 அரசாங்க சிப்பந்திகளும் சம்பந்தப்பட்டிருந்தார்கள். கெசட் பதிவு அதிகாரிகளில் மூவர் இரயில்வேயைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் அஞ்சல் தந்தி துறையைச் சேர்ந்தவர்; இருவர் அரசாங்கத் துறை நிறுவனங்களைச் சேர்ந்தவர்.

ஐந்து அரசாங்க ஊழியர்கள், இலஞ்சம் வாங்கும்போது கையும் களவுமாகப் பிடிபட்டார்கள். இவர்களுள் ஒருவர் இந்திய விமானப்படையைச் சேர்ந்த ஒரு பிளைட் லெப்டினன்ட்.

டிசம்பர் மாதத்தில் 30 வழக்குகள் தொடரப்பட்டன. நம்பிக்கைத் துரோகம், முறைகேடான நடத்தை ஆகிய குற்றங்களுக்காக ஒரு கெசட் பதிவு அதிகாரி உட்பட 17 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

வரி செலுத்துபவர் ஒருவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வருமான வரி அதிகாரி பிறப்பித்த உத்தரவுகளை மாற்றி அதற்குப் பதிலாகக் கள்ளக் கையெழுத்திட்டு மற்றொரு உத்தரவைத் தயார் செய்த குற்றத்திற்காக வருமான வரி இலாகாவைச் சேர்ந்த இரண்டு உயர் பிரிவு எழுத்தருக்கு எதிராக வழக்குத தொடரப்பட்டிருக்கிறது.

33 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. கெசட் பதிவு அதிகாரிகள் இருவரும், கெசட் பதிவு இல்லாத ஆறு பேரும், தனிப்பட்ட 23 நபர்களும் தண்டனைக்குள்ளானார்கள். சிறைத் தண்டனையுடன் மொத்தம் ரூ. 5,30,810 அபராதமும் விதிக்கப்பட்டது.

இலவசக் கருத்தடைச் சாதனங்கள்

மத்திய அரசின் திட்டம்

புதுடில்லி, ஜூன் 30—

'காண்டோம், கருத்தடைக் கருவிகளை அரசினர் மருந்தகங்கள், குடும்ப நலத் திட்ட நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் அகியவற்றின் மூலமாக வழங்குவதற்காக மத்திய சுகாதார குடும்பக் கட்டுப்பாட்டுத்துறை பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

இலவச விநியோகத் திட்டத்தின்படி, இந்தக் கருத்தடைச் சாதனங்களை அரசாங்கம் வழங்கும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கட்தொகை அடிப்படையிலும், அங்கு குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதன் அடிப்படையிலும் மத்திய குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரிவு, கருத்தடைச் சாதனங்களை ஒதுக்கியிருக்கிறது. 'காண்டோம்' ஒதுக்கீடுபற்றி மாவட்ட வாரியான விவரங்களை மாநிலங்கள் நேரடியாக டெப்போக்களுக்கு அனுப்ப வேண்டும்; அவற்றுக்கு 250 இலட்சம் சாதனங்கள் வழங்கப்படும்.

கரூரில் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் அமைப்பு

கரூர், ஜூன் 30—

27—6—68-ல், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் மத்திய சங்க பொதுச்செயலாளர் எஸ். ஜி. கிருஷ்ணன் தலைமையில் கிளைச் சங்கம் அமைக்கப்பட்டது.

தலைவராக ஆர். என். இராமசாமியும், செயலாளராக பரமத்தி சண்முகமும், துணைத் தலைவராக கே. சேக் அலியும், துணைச்செயலாளராக ஆர். கோவிந்தராசுவும், பொருளாளராக ஜி வி. கோபால கிருஷ்ணனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாலை 5-மணியளவில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் ஆர். கோவிந்தராசு தலைமை தாங்கினார். தோழர்கள் எஸ். ஜி. கிருஷ்ணன், பரமத்தி சண்முகம், கே. ஆர். நாராயணன், கே. ஜி உமாகாந்தன், ஒளிமாறன், எஸ். கொண்டையப்பன், வி. சுப்பையா ஆகியோர் பேசினர்.

ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

27—6—68-ல் மலைக்கோவிலூர் கூட்டுறவு நூற்பு ஆலைமுன், திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுக்கூட்டம், தோழர் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் எஸ். ஜி. கிருஷ்ணன், பரமத்தி சண்முகம, கே. ஆர். நாராயணன், கே. ஜி. உமாகாந்தன், ஒளிமாறன் ஆகியோர், மிக மிகச் சாதாரண கோரிக்கைகளுக்குக்கூட செவிசாய்க்க மறுக்கும் ஆலை நிர்வாகத்தின் அலட்சியப் போக்கினைக் கண்டித்துப் பேசினர்.

ஒப்பந்தத் தொழிலாளர்கட்குப் பாதுகாப்பு

சென்னை, ஜூலை 4—

சில நிறுவனங்களில், தொழிலாளர் ஒப்பந்த வேலைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும், சில சந்தர்ப்பங்களில் அதை ஒழிப்பதற்கும், அதனோடு சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் மத்திய அரசு, '1967-ம் ஆண்டு தொழிலாளர் ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல், ஒழிப்பு) மசோதா'வைக் கொண்டு வந்துள்ளது.

இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்கான காரணங்களும், அதன் நோக்கங்களும் வருமாறு ;-

தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் வேலைக்கு அமர்த்தும் முறையே பல்வேறு தவறுகளுக்கு வழிகோலுவதாக இருக்கிறது; அதை ஒழித்து விடுவது பற்றி அரசு நீண்ட நாட்களாக ஆலோசித்து வந்தது.

தொழிலாளர் ஒப்பந்த முறைப் பிரச்சினைகளை ஆராய்வது—அதைப் படிப்படியே ஒழிப்பது—ஒழிக்க இயலாத இடங்களில் தொழிலாளர்களின் வேலை நிலைகளைச் சீர்திருத்துவது—ஆகியவைபற்றித் திட்டக் குழு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில பரிந்துரைகளைச் செய்திருந்தது. முத்தரப்புக் கூட்டங்கள் பலவற்றில் இதுபற்றி விவாதிக்கப்பட்டது; இவற்றில் மாநில அரசுகளும் கலந்து கொண்டன.

நடைமுறையில் இயலக்கூடிய இடங்களிலெல்லாம் இந்த முறையை ஒழித்துவிட வேண்டும் என்றும், அப்படிச் செய்ய இயலாத இடங்களில் இந்தத் தொழிலாளர்களுக்குக் கூலியும், இன்றியமையா வசதிகளும் கிடைக்கின்றவகையில் அவர்களது வேலை நிலைமைகள் சீர்திருத்தப்பட வேண்டுமென்றும் பொதுக் கருத்து நிலவுகிறது.

இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மசோதா, அந்தந்த அரசு அறிவிக்கிற தகுதி — நிர்ணயங்களின் அடிப்படையில் தொழிலாளர்கள் ஒப்பந்த முறையை ஒழித்துவிடவும், அப்படி ஒழிகக முடியாத இடங்களில் அவர்களது வேலை நிலைமைகளைச் சீர்திருத்தவும் வகைசெய்கிறது.

சட்டத்தைச் செயல்படுத்துவதிலும், நிறுவனங்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்வதிலும் மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்கும் யோசனை கூறுவதற்குப் பல்வேறு பகுதியினர் அங்கம் வகிக்கும் முத்தரப்புத்தன்மை வாய்ந்த ஆலோசனைக் குழுக்களை நியமிக்க இம்மசோதா வகை செய்கிறது.

அதிலுள்ள திட்டத்தின்படி, ஒப்பந்த முறை, தொழிலாளர்களுக்குக் குடிநீர், முதலுதவி, ஓய்வு அறைகள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற சில அடிப்படை வசதிகள் செய்து தருவது கடமையாக்கப்பட்டுள்ளது.

கூலி தரத் தவறினால், எடுத்துக் கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலகத் தமிழ் மாநாட்டு மலர்கள்

ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு ஆணை

வேலூர், ஜூலை 2—

உலகத் தமிழ் மாநாட்டு மலர் (விலை ரூ. 30); உலகத் தமிழ் மாநாட்டுப் பொருட் காட்சி மலர் (விலை ரூ. 15); புகாரில் ஒரு நாள் (விலை ரூ. 1)—ஆகிய நூல்களை வாங்கி வைக்குமாறு எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தமிழக அரசு ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள், தங்கள் சமூகக் கல்வி நிதியிலிருந்து இந்நூல்களை வாங்கப் பணம் எடுத்துக் கொள்ளலாம் என்றும், ஊராட்சி ஒன்றியத் தகவல் நிலையத்தில் இப்புத்தகங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

23. 'சர்வே' இலாகாவில் நீண்டகாலமாகப் 'பணி உறுதி' செய்யப்படாமல் இருந்த 3,000 ஊழியர்களுக்குப் 'பணி உறுதி' செய்யப்பட்டது—கழக ஆட்சியில்!
24. உதகை, குன்னூர், கொடைக்கானல் போன்ற குளிர்ப் பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் 'குளிர்கால உதவிப் பணம்' தரப்படுகிறது—கழக ஆட்சியில்.
25. மாநில அரசு ஊழியர்கள் சேமித்து வைத்திருக்கும் விடுமுறை நாட்களுக்கு விடுமுறை எடுக்காமல் பணியாற்றினால், அக்காலத்திற்கு ஊதியம் கொடுக்கப்பட இருக்கிறது.
26. தமிழக அரசின் இரு மொழித் திட்டத்தால், உரிய வேலை இல்லாதோருக்கு—அவர்கள் தற்பொழுது பெறும் சம்பளம் குறையாமல்—மாற்று வேலை தரப்படுகிறது.
27. மாற்று வேலை கொடுக்கப்படும் வரை அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.
28. நகராட்சிக் கல்வி அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயது வரம்பு, மற்ற ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது வரம்பைப்போல் 58-ஆக உயர்த்தப்பட்டது.
29. காங்கிரசாட்சியில் தலைமைச் செயலக ஊழியர்களுக்கு உப்பு நீர்தான் குடிநீராகக் கொடுக்கப்பட்டது; தற்பொழுது கழக ஆட்சியில் நல்ல செங்குன்றத்து நீர் கொடுக்கப்படுகிறது.
30. தலைமைச் செயலக ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த பதவி உயர்வு முறை அமுலுக்கு வருகிறது. இதனால், எல்லோருக்கும் பதவி உயர்வில் சம வாய்ப்பு கிடைக்கிறது.
31. ஊழியர்கள் தவணை முறையில் கைத்தறித் துணி பெறுவதற்கு கழக அரசு அனுமதி அளித்துள்ளது.
32. ஒரே கூட்டமைப்பில் பணியாற்றும் ஊழியர்களுக்குள் (ஊதியத்தில்) உள்ள வேறுபாடு அண்ணா ஆட்சியில் நீங்குகிறது.
33. ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவு அதிகாரிகளாகப் பணியாற்றுவோரின் பதவி நிரந்தரமாக்கப்பட்டதால், கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் பதவி உயர்வுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

—தொகுத்தவர் : மு. இளங்கோ

முன்னாள் முதல்வருக்கு வாரி வழங்கினர் வரிப் பணத்தை!

பட்நாய்க்கின் சொந்த நிறுவனத்துக்கு ரூ. 41.49 இலட்சம் அதிகப் பற்று

ஒரிசாவில் காங்கிரசு ஆண்டபோது புரிந்த ஊழல்கள்

புவனேசுவரம், சூலை 4—

ஒரிசாவில் இருந்த காங்கிரசு அரசு எத்தகைய ஊழல்களைப் புரிந்திருக்கிறது என்பதை, 1968-ம் ஆண்டின் கணக்குத் தணிக்கைக் குழு வெளியிட்டிருக்கிறது :—

ஒரிசா காங்கிரசு அரசின் முதல்வராக இருந்தவர் பட்நாயக்.

'கலிங்கா இண்டஸ்ட்ரீஸ்' என்பது பட்நாயக்கின் சொந்த நிறுவனமாகும்.

ஒரிசா அரசின் ஒரு துறையான தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன், பட்நாயக்கின் நிறுவனத்துச்கு ரூ 41,49,000 அதிகமாகக கொடுத்திருக்கிறது.

கடந்த 1967-வரை கலிங்கா தொழிற்சாலைச்கு ஒரிசா அரசு ரூ 72 25 இலட்சம் கொடுத்திருக்கிறது.

இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு எவ்வளவு நிகர இலாபம் சம்பாதிக்கிறதோ அந்த அளவு தொகையைத்தான் ஒரிசா அரசு வழங்கும் என்று இருசாரப்பினருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் 1963—64-லிருந்து 1965—66-வரையில் கலிங்கா ஆலை, ரூ. 30.76 இலட்சம்தான் இலாபம் பெற்றது. 1966—67-ல் இந்த நிறுவனத்துக்கு ரூ. 5.60 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

இந்தக் கணக்கின்படி, ஒரிசா அரசு, முன்னாள் முதல்வரின் நிறுவனமான கலிங்கா ஆலைக்கு ஏறத்தாழ ரூ. 30-இலட்சமதான் தரவேண்டும; ஆனால் ஒரிசா அரசு வழங்கிய தொகையோ, ரூ. 72 25 இலட்சமாகும்; ரூ. 41,49,000 அதிகமாகத் தரப்பட்டிருக்கிறது.

ஒரிசா காங்கிரசு அரசின் வரவு—செலவுகளை ஆராய்ந்த தணிச்கைக் குழு மேலும் பல ஊழல்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

"ஒரிசா மாநில அரசின் எல்லாத் துறைகளிலுமே ஊழல் இருந்துள்ளது" என்று கணக்குத் தணிக்கைக் குழு தெரிவித்துள்ளது.

காங்கிரசு அமைச்சர்கள்மீது 186 குற்றச்சாட்டுகள் !

விசாரணைக் குழுவிடம் தாக்கல்

பாட்னா, சூலை 4—

முன்னாள் காங்கிரசு அமைச்சர்கள்—முன்னாள் காங்கிரசுத் துணை அமைச்சர்கள் மீது செய்யப்பட்டுள்ள இலஞ்ச ஊழல், அதிகார துஷ்பிரயோகப் புகார்கள் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம், பீகார் அரசு, மொத்தம் 186 குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்தது.

முன்னாள் அமைச்சர்கள் நான்கு பேர்மீதும், துணை அமைச்சர்கள் இருவர் மீதும் இந்தக் குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டுள்ளன.

முதலாவது ஐக்கிய முன்னணி அரசு, இக்குழுவை நியமித்தது நினைவிருக்கலாம்.

முதலில் 192 குற்றச்சாட்டுக்கள் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தன; இப்போது அதில் ஆறு குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டுள்ளன.

முன்னாள் முதலமைச்சர் கிருஷ்ண வல்லப சகாய் மீதுதான் அதிகமான குற்றச்சாட்டுக்கள் (69 குற்றச்சாட்டுக்கள்) செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் நீர்ப்பாசன அமைச்சர் மகேஷ் பிரசாத் சின்காமீது 32 குற்றச்சாட்டுக்களும், முன்னாள் கல்வியமைச்சர் சத்யேந்திர நாராயண் சின்காமீது 20 குற்றச்சாட்டுக்களும், முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் ராம் லக்கன் யாதவ்மீது 45 குற்றச்சாட்டுக்களும், முன்னாள் நிதித் துறைத் துணையமைச்சர் அம்பிகா சரண் சிங்மீது 11 குற்றச்சாட்டுக்களும், முன்னாள் போக்குவரத்துத் துணையமைச்சர் இராகவேந்திர நாராயண் சிங்மீது 9 குற்றச்சாட்டுக்களும் செய்யப்பட்டுள்ளன.

டெல்லி அரசுக்கு சீக்கியத் தலைவர் அறைகூவல்

பெரிய போராட்டம் நடத்தப்போவதாக அறிவிப்பு

அமிருதசரஸ், சூலை 4—

"சண்டிகார் நகரம் இப்போது அரியானா மாநிலத்துக்கும்—பஞ்சாப் மாநிலத்துக்கும் தலைநகராக இருந்துவருகிறது; 'அது, எந்த மாநிலத்துக்கு உரியது' என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிடவேண்டும்"

என்று, சீக்கிய மதத் தலைவர் சாந்த் பதே சிங், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"பக்ரா-நங்கல் அணைக்கட்டையும், அரியானா மாநிலத்துடன் சேர்க்கப்பட்டுவிட்ட பஞ்சாப் பகுதிகளையும், பஞ்சாப் மாநிலத்துக்குத் திருப்பித் தரவேண்டும்; இதுபற்றி விரைவில் டெல்லி அரசு, தன்னுடைய முடிவை அறிவித்துவிடவேண்டும்; இன்றேல், பெரிய போராட்டம் ஒன்றைத் துவங்குவேன்.

"இந்தப் போராட்டம் நடைபெறுமானால், அதனால் நாட்டுக்கும்—அரசுக்கும் பெரும் நட்டம் ஏற்படும்; எனவே இந்த விவகாரத்தில் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும்."

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு

நான்கு குழுக்கள் நியமனம்

சென்னை, சூலை 4—

மாநிலத்திலுள்ள 8 அரசினர் மருத்துவக் கல்லூரிகளுக்குச் சேர மனுப் போட்டுள்ள மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நான்கு குழுக்களை தமிழக அரசு நியமித்திருக்கிறது.

ஒவ்வொரு குழுவிலும் மூன்று உறுப்பினர்கள் இருப்பர்.

சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா இத்தகவலை, செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் உத்தியோகச் சார்பற்ற ஒருவர் தலைவராயிருப்பார்.

ஒவ்வொரு குழுவிலும், மற்ற இரண்டு உறுப்பினர்களும் அதிகாரிகளாவர்.

குழு ஒவ்வொன்றும் தனித் தனியாக சென்னை, தஞ்சாவூர், கோயமுத்தூர், மதுரையில மாணவர்களுக்குப் பேட்டி அளிக்கும்.

குழுக்கள் மாணவர்களுக்குப் பேட்டியளிக்கத் தாங்களே திட்டத்தைத் தயாரித்து மாணவர்களுக்கு அதைத் தெரியப்படுத்தும்.

குழுக்கள் தங்களுடைய வேலையை விரைவில் முடித்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

5--7--68

நல்லாட்டூர்

தி.மு.க. சார்பில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கட்கு வரவேற்பும் தோழர் டி.கே. பொன்னுவேலு எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட்டும்; மாலை 6-30 மணிச்கு; தலைவர்: குப்புசாமி; பேசுவோர்:சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., எஸ். எம். துரைராஜ் எம்.எல்.ஏ., சேலம் தம்பிதாசன், எல். பாலகிருஷ்ணன், எஸ். அப்பர்சுந்தரம், ஏ. பரந்தாமன், பி. கோவிந்தசாமி.

காளையூர்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: கே.எஸ். செல்லப்ப கவுண்டர்; பேசுவோர்: பி.ஏ. சாமிநாதன் எம்.பி., எஸ்.கே. சுப்பிரமணியம், எஸ்ஜி கண்ணப்பா, ஒன்னமாரண்ணன், சிவக்கொழுந்து, என்.எஸ். இரங்கசாமி, கே.பி. கிருஷ்ணசாமி.

சென்னை 10-வது வட்டம்

கே.எஸ். அருணாசலம் நினைவு மன்றம், எம்.ஜி ஆர். இரவுப் பள்ளி ஆகியவை சார்பில் மாலை 7 மணிக்கு வண்ணை கல்லறைத் திடலில்; தலைவர்: டி. வெங்கடேசன்; பேசுவோர்: ஈ. குபேர் (முன்னாள் புதுவை முதலமைச்சர்), க. அறிவழகன் எம்.எல்.சி., என்.வி.என். சோமு,இளம்பரிதி, அரங்கநாதன், ந. இராசமன்னார், பி.ஏ.என். இராசரத்தினம்.

ஆத்தூர்--புதுப்பேட்டை

தி. மு. க. சார்பில் காலை 11-மணிக்கு வ. உ. சி. நகரில்; தலைவர் : ப. அ. ஆறுமுகம்; கொடியேற்றுபவர் : டி. கே. மாதவன் ; பேசுவோர் : க. அன்பரசு, ஜி. என். பெரியசாமி, எஸ். இராமசாமி, ஆர். கன்னியன், டாக்டர் ஆர். சௌந்திரராசன், என். கே. இராசு, கே. வி. இராமநாதன்.

6--7--68

திருச்சி

எம்.ஜி ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு தையற்காரத் தெருவில்; தலைவர்: ஜி. அன்புமணி; பேசுவோர்: கேரள சுந்தரம், அ. நடராசன், எஸ்.ஏ. ஜி. ராபி, வி. கிருஷ்ணமூர்த்தி, வி. பெரியண்ணன்.

துணிந்துவிட்டது டெல்லி அரசு!

அரச பரம்பரை உரிமைகள் பறிக்கப்படும்

உதவித் தொகை மட்டும் குறிப்பிட்ட காலத்துக்கு நீடிக்குமாம்

புதுடில்லி, சூலை 4—

தற்போது இந்நாட்டிலுள்ள முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கின்ற மானியத்தையும், அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற அரச பரம்பரை உரிமைகளையும் நீக்கிவிட மத்திய அரசு இறுதியாக முடிவு செய்திருக்கிறது.

உள்நாட்டுப் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட அமைச்சரவைக் குழு, இப்பிரச்சினை பற்றி உள்துறை அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை, ஏறத்தாழ ஒரு மணி நேரம் விவாதித்தது.

முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படுகின்ற தனி உரிமைகளை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவித் தொகையைக் குறிப்பிட்ட காலம்வரை குறிப்பிட்ட தொகையை (20 அல்லது 25 ஆண்டுகளில் வழங்கக்கூடிய வகையில) வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படும். இதனால் எத்தகைய நிதித் தொல்லையும் அரசுக்கு ஏற்படாத வகையில் இந்தக் குறிப்பிட்ட அளவில் தொகை வழங்கப்படும்.

மத்திய நிதி அமைச்சகத்தால் முடிவு செய்யப்பட்ட இந்த அளவுத் தொகை முன்னாள் சிற்றரசர்களுக்கு சற்று அதிகமாகவே இருக்கும் என்று தெரிகிறது.

இந்நாட்டில் 279 முன்னாள் மன்னர்கள் இருக்கின்றார்கள்; இவர்களுக்கு ஆண்டு ஒன்றுச்கு ரூ. 5 கோடிவரை செலவாகிறது.

ஆண்டு ஒன்றுக்கு மைசூர் மன்னருக்கு மட்டும் ரூ. 20 இலட்சம் கிடைக்கிறது. இதுதான், முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படுகின்ற அதிகமான தொகையாகும்.

பழைய நிஜாம் மன்னர் ரூ. 50 இலட்சம் உதவித் தொகையாகப் பெற்றார்; தற்போது உள்ள நிஜாம மன்னர் ரூ. 20 இலட்சம் மட்டுமே ஆண்டு ஒன்றுக்கு பெறுகிறார்.

ஓர் இலட்சத்துக்கும் குறைவாக உதவித் தொகை பெறும் முன்னாள் மன்னர்கள் 179 பேர் இருக்கின்றனர்.

ருசி கண்டவர்களின் உண்மை உருவம் தெரிகிறது!

கம்பெனி நன்கொடைகளைத் தடுக்கக்கூடாதாம்

பாட்டீல் உருவில் காங்கிரசார் முட்டுக்கட்டை!

புதுடில்லி, சூலை 4—

அரசியல் கட்சிகளுக்கு கம்பெனிகள் நன்கொடை வழங்குவதைத் தடுக்கும் முயற்சியை எதிர்ப்பதில் உறுதிகாட்டுமாறு காங்கிரசுத் தலைவரை, எஸ். கே. பாட்டீல் வற்புறுத்தியுள்ளார்.

"தற்போதுள்ள வழக்கத்துக்கு நல்ல மாற்று ஏற்பாடு காணும் வரை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இது பற்றிய மசோதாவை நிறைவேற்றக் கூடாது"

எனக் காங்கிரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் விவாதித்திருப்பதுடன், மேலும் அதுபற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது :—

"அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் கொடுக்கும் நன்கொடைகள், கணக்கில் வருபவை—ஒழுங்கினமற்றவை; சட்டப்படி இதை நிறுத்தினால் இரகசியப் பேரங்கள் நடக்கும்; அது, மேலும் வெறுக்கத்தக்கது. பல விரும்பத்தகாத சம்பவங்களுக்கு அது இடமளிக்கும்.

"தேர்தலில் போட்டியிடப் போதுமான அளவுக்கு சிறிய வசூல்கள் மூலம் அரசியல் கட்சிகள் பணம் திரட்ட முடியாது; அதனால்தான் அவைகள், கம்பெனிகளை நம்பியிருக்கின்றன.

"தற்போதைய பழக்கத்தில் தவறு ஏதுமில்லை; ஏனென்றால், 'செக்' மூலம் பணம் கொடுக்கப்படுகிறது; அதை தணிக்கை செய்யமுடியும்."

காங்கிரசு செயற் குழுவுடன் ஆலோசனை செய்யாமல் கம்பெனி நன்கொடைகளுக்கு தடை விதிக்கும் மசோதாவை அரசு கொண்டு வந்த விதத்தை அவர் கண்டித்தார்.

காங்கிரசு செயற்குழுவின் அடுத்த கூட்டத்தில், இந்தப் பிரச்சினையை அவர் எழுப்பக்கூடும்.

உணவுக்கு வெளிநாட்டில் கையேந்தும் நிலையிலும்...

உள்நாட்டில் 2,100 மூட்டை கோதுமை பாழ்!

பூனா, சூலை 4

அண்மையில் பஞ்சாபிலிருந்து பூனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கோதுமையில 2100 மூட்டைகள் மழையில் நனைந்து ஊறிப்போய்க் காணப்பட்டன; அவற்றில் 15 முதல் 17 சதவிகிதம் முழுவதுமே சேதமடைந்தன.

இத்தகவலைத் தெரிவித்துள்ள பூனா கலெக்டர், குறிப்பிட்டிருப்பதாவது :—

"ஓரளவு நனைந்துள்ள கோதுமையை உலர்த்துவதற்குத் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சுகாதாரத் துறை ஒப்புதல் அளித்த பிறகே அது மக்களுக்கு வழங்கப்படும்.

"மனிதர்கள் சாப்பிடுவதற்கு இலாயக்கில்லை என்று தெரிந்தால் மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்த கால்நடைத் துறைக்கு அவை அனுப்பி வைக்கப்படும்.

"கால் நடைகளின் உணவுக்கும் இலாயக்கில்லை என்றால், அவை அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும்."

கவலை -- சந்தேகம் -- தலைவலி!

இதுதான் அமைச்சகமாம் !

புதுடில்லி, சூலை 4—

"கவலை—சந்தேகம்—தலைவலி—இவைதான் என்னுடைய அமைச்சகம்"

என்று மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் ஜெகன்னாத ராவ் கூறியிருக்கிறார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"வீடுகள் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் வரும் போது எனக்குக் கவலையும் தலைவலியும் ஏற்படுகிறது; தனித் துறையைச் சார்ந்த காண்டிராக்டர்களிடம் 'ஈடுபாடு கொள்ளும்போது என்மீது பலருக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

"என்னுடைய அமைச்சகம், 'ஒரு பெரிய சாம்ராஜ்யம்' என்று பலர் நினைக்கின்றனர் !"

புது வகை உணவு

மரவள்ளிக் கிழங்கில் தயாரிப்பு

புதுடில்லி, சூலை 4—

கேரளத்தில் பெருமளவில் பயிராகும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து நிறைந்த சத்துள்ளதும் சுவையானதுமான உணவுப் பொருள் தயாரிக்கலாம் என்று தற்போது இலண்டனில் நடக்கும் புதிய பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

புரதச் சத்தை அதிகரித்து இனிய உணவுப் பொருளாக இதை மாற்றும் சோதனைகள் நடைபெறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) [illegible]